மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.07/2025
இன்
அசல் வழக்கு எண்.58/2019
-------

ஜெகதீஷ் .. மனுதாரர்/வாதி

/எதிர் /

1. சந்திரபோஸ் (இறப்பு)
2. சந்தனக்குமார்
3. சார்பதிவாளர், சாத்தூர்
4. மாவட்ட பதிவாளர்,
விருதுநகர் மாவட்டம்.
5. தமிழக அரசுக்காக,
மாவட்ட ஆட்சியர், விருதுநகர். .. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 5 பிரதிவாதிகள்
6. தனபாக்கியம்
7. உமாமகேஸ்வரி
8. கவிதா
9. ேஹமா .. 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/
6 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 08.04.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G.R. முருகன், அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது அசல் வழக்கின் நடவடிக்கையின்போது இறந்து போன 1ம் பிரதிவாதியான சந்திரபோஸின் மனைவி மற்றும் பிள்ளைகளை தாவா வழக்கில் முறையே 6 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்த்து தாவா வழக்கை மேல் நடத்த அனுமதித்து உத்தரவிட வேண்டி கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பு அபிடவிட்டின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர் தபசில் சொத்தினை பொறுத்து 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் 03.09.2009ம் தேதிய ஆவண எண்.8157/2009ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல மற்றும் அவை வெறிதானது மற்றும் விழலானது என விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி கிரைய பத்திரத்தை 3ம் பிரதிவாதி தனது அலுவலக கோப்புகளில் இருந்து நீக்கரவு செய்ய 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க கோரியும், தபசில் சொத்துக்களை மனுதாரர் அமைதியான முறையில் அனுபவித்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ அவர்தம் வகையாட்களோ எவ்வித இடைஞ்சலும், எவ்வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாதென அவர்களுக்கு ஒரு நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பிறப்பிக்க கோரியும் தாவா அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2.2. மனுதாரர்/வாதி தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக தகவல் வந்ததாகவும், மேற்படி 1, 2 பிரதிவாதிகளின் மோசடி செயலுக்கு அவரது வாரிசுகள் எவ்வகையிலும் பொறுப்பாகமாட்டார்கள் என்று எண்ணி மேற்படியாரின் இறப்பை மட்டும் பதிவு செய்து தாவா அசல் வழக்கை மேல் நடத்தி வந்துள்ளார். தாவா அசல் வழக்கில் மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றும், மேற்படியார்கள் தாவா வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள்

என்றும், காரணம் குறிப்பிட்டு கடந்த 01.02.2024ம் தேதி தாவா அசல் வழக்கினை தள்ளுபடி செய்துள்ளது. மேற்படி தள்ளுபடி உத்தரவின் பேரில் மனுதாரர்/வாதி மாண்புமிகு சார்பு நீதிமன்றம் சாத்தூரில் மேல்முறையீட்டு வழக்கு எண்.10/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.3. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் தாவா அசல் வழக்கு நடவடிக்கையின் போது இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவா அசல் வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்றும், அவர்களை சேர்த்து கீழமை நீதிமன்றம் தாவா அசல் வழக்கினை தீர்மானிக்க வேண்டும். 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவா அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை அனுமதித்து தாவா அசல் வழக்கினை Remand Back செய்து கடந்த 29.08.2025ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பித்துள்ளது. அதனடிப்படையில் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் பிள்ளைகளை அவசிய தரப்பினர்களாக சேர்த்து தாவா அசல் வழக்கை மேல் நடத்த வேண்டியதாக உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டமும், தாவா அசல் வழக்கினையும் முழுமையாக தீர்மானிக்க இயலாத சூழ்நிலையும் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் –</u>

3.1. மனுதாரர்/வாதி தரப்பில் தாவா அசல் வழக்கின் நடவடிக்கையின் போது இறந்துபோன 1ம் பிரதிவாதி சந்திரபோஸின் மனைவி மற்றும் பிள்ளைகளை தாவா வழக்கில் 6 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்த்து தாவா வழக்கை மேல்நடத்த அனுமதித்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் வழக்கின் பொருண்மைபடிக்கும் செல்லத் தக்கதல்ல. மனுவில் கோரியுள்ள யாதொரு பரிகாரமும் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. இதனடியில் வியக்கமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்ற சங்கதிகள் யாவும் பொய் மற்றும் தவறு என்று மறுக்கப்படுகிறது.

அவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும்.

3.2. 6 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி கடந்த 10.04.2019ம் தேதி மேற்படியார்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவரது மனைவி பெயர் தனபாக்கியம் ஆகும். தாவா மனு மற்றும் நீதிமன்றம் மூலம் அனுப்பப்படும் அறிவிப்பு நோட்டீஸ் ஆகியவற்றிலும் அன்னபாக்கியம் என்று தவறாக குறிப்பிட்டு அனுப்பப்பட்டுள்ளது. எதனடிப்படையில் அன்னபாக்கியம் என்று குறிப்பிடப்பட்டது என்பதற்கான விளக்கம் மனுதாரர்/வாதி தரப்பில் குறிப்பிடப்பட வேண்டும். தபசில் சொத்து கிரையம் வாங்கப்பட்ட விபரம் மட்டும் 1ம் பிரதிவாதி சொல்லி எதிர்மனுதாரர்களுக்கு தெரியும். மேற்படி 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட காரணத்தினாலும், 1ம் பிரதிவாதியின் பிள்ளைகளான 6 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அனைவரும் திருமணம் முடிந்து வெவ்வேறு ஊர்களில் குடியிருந்து வந்த காரணத்தினாலும், 1ம் பிரதிவாதியின் மனைவியும் பிள்ளைகளுடன் குடியிருந்து வந்த காரணத்தினாலும் மேற்படி வழக்கு பற்றிய விபரம் ஏதும் அவர்கள் அறிய முடியவில்லை.

3.3. பொதுவாக ஒரு வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்தைப் பொறுத்து ஆவணம் செல்லாது என்றோ அல்லது அந்த சொத்தினை அனுபவம் செய்யும் நபரை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரும்போதோ, அந்த சொத்தை கிரையம் பெற்ற நபர், கிரையம் செய்து கொடுத்த நபர் மற்றும் மேற்படி நபர்களில் எவரேனும் இறந்திருப்பின் அவர்களது வாரிசுகள் அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். மேலும் தபசில் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி நல்ல பிரதிபிரயோஜனத்தின் பேரில் கிரையம் செய்து அனுபவித்து, பின்பு 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ள நிலையில், மேற்படி 1ம் பிரதிவாதி மோசடியாக கிரையம் செய்துள்ளார் என்றும், தபசில் சொத்தை மனுதாரர்/வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ இடைஞ்சல் செய்யக்கூடாது என்று விளம்புகை செய்யுமாறும் தாவா வழக்கில் பரிகாரம் கேட்கப்பட்டுள்ள நிலையில் 1ம்

பிரதிவாதியின் வாரிசுகள் தாவா வழக்கை பொறுத்து அவசிய கட்சிக்காரர்கள் ஆவார்கள். மேலும் தாவா மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் நீதிமன்ற நேரத்தை வீண் விரயம் செய்வதற்காகவும், வழக்கின் காலத்தை நீட்டிக்கவும் வேண்டிய தாக்கல் செய்யப்பட்டதாக தெரிய வருகிறது. மேற்படி மனுவானது முறையாக தாக்கல் செய்யப்படவில்லை. காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப் படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப் படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

6.**1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. இவ்வழக்கு குறித்து மாண்புமிகு சார்பு நீதிமன்றம் மேல்முறையீட்டு வழக்கு எண்.10/2024–ல் இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்த்து கீழமை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டும் என்று அசல் வழக்கினை Remand Back செய்து கடந்த 29.08.2025ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. இது குறித்த ஆவணங்கள் மற்றும் மேற்குறிப்பு ஆகிறவற்றை இந்நீதிமன்றம் பரிசீலித்து பார்த்துள்ளது. அதனடிப்படையில் தொடுக்கப்பட்ட இம்மனுவை பொறுத்து இறந்து போன 1ம் பிரதிவாதியான சந்திரபோஸின் மனைவி மற்றும் பிள்ளைகளை தாவா வழக்கில் முறையே 6 முதல் 9 வரையான உத்தேச பிரதிவாதிகளாக சேர்த்து தாவா வழக்கை மேல்நடத்த அனுமதிப்பதே நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>7. இறுதி முடிவு</u>**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
இ.ம.எண்.07/2025
இன்
அ.வ.எண்.58/2019
**உத்தரவு**
நாள்-15.04.2026.